# பெற்றோரைத் துன்புறுத்தல்

**அவனையன்றி (வேறு எவரையும்) நீர் வணங்கலாகாது என்றும், பெற்றோருக்கு நன்மை செய்ய வேண்டும் என்றும் உம்முடைய இறைவன் விதித்திருக்கிறான்; அவ்விருவரில் ஒருவரோ, அவர்கள் இருவருமோ உம்மிடத்தில் நிச்சயமாக முதுமை அடைந்து விட்டால், அவர்களை 'உஃப்' (சீ) என்று (சடைந்தும்) சொல்ல வேண்டாம். அவ்விருவரையும் (உம்மிடமிருந்து) விரட்ட வேண்டாம் - இன்னும், அவ்விருவரிடமும் கனிவான கண்ணியமான பேச்சையே பேசுவீராக! இன்னும், இரக்கம் கொண்டு பணிவு என்னும் இறக்கையை அவ்விருவருக்காகவும் நீர் தாழ்த்துவீராக மேலும், "என் இறைவனே! நான் சிறு பிள்ளையாக இருந்தபோது, என்னை(ப் பரிவோடு) அவ்விருவரும் வளர்த்தது போல், நீயும் அவர்களிருவருக்கும் கிருபை செய்வாயாக!"** என்றும் கூறி பிரார்த்திப்பீராக! *அல்குர்ஆன் 17:23,24*

**நாம் மனிதனுக்குகத் தன் பெற்றோர் (இருவருக்கும் நலம் செய்ய வேண்டியது) பற்றி வஸிய்யத்துச் செய்(து போதித்)தோம்; அவனுடைய தாய் பலவீனத்தின் மேல் பலவீனம் கொண்டவளாக (கர்ப்பத்தில்) அவனை சுமந்தாள். இன்னும், அவனுக்குப் பால் குடிமறத்த(லி)ல் இரண்டு வருடங்கள் ஆகின்றன. எனவே, "நீ எனக்கும் உன் பெற்றோருக்கும் நன்றி செலுத்துவாயாக. என்னிடமே உன்னுடைய மீளுதல் இருக்கிறது".**

*அல்குர்ஆன் 31:14*

**அல்லாஹ்வுக்கும் வழிப்படுங்கள்; அவன் தூதருக்கும் வழிப்படுங்கள்.**

*அல்குர்ஆன் 3:32*

**தொழுகையை நிலை நிறுத்துங்கள்; ஜகாத்தையும் கொடுங்கள்.**

*அல்குர்ஆன் 2:43*

**எனக்கும் உன்னுடை தாய், தந்தைக்கும் நன்றி செலுத்தி வருவாயாக.**

*அல்குர்ஆன் 31:14*

**"பெற்றோரின் திருப்தி அல்லாஹ்வின் திருப்தியாகும். பெற்றோரின் வெறுப்பு அல்லாஹ்வின் பெறுப்பாகும்".**

*நூல்கள் : திர்மிதி, இப்னுஹிப்பான், ஹாகிம்*

**"ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, யுத்தத்திற்குச் செல்ல அனுமதி கேட்டார். 'உன் பெற்றோர் உயிருடனிருக்கின்றனரா?' என நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள் 'ஆம்!' என்று அம்மனிதர் கூறினார். 'அப்படியானால், அவர்களுக்குச் சேவை செய்வீராக!'** எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*நூல்கள் : புகாரீ, திர்மிதி, முஸ்லிம், அபூதாவூத், நஸயீ*

**“பெரும் பாவங்களில் கொடியதை நான் உங்களுக்குக் கூறட்டுமா? அல்லாஹ்வுக்கு இணை வைத்தலும், பெற்றோரைத் துன்புறுத்துவதுமாகும்”.**

*நூல்கள் : புகாரி, முஸ்லிம்*

**“தாய், தந்தையை வெறுத்தவனை அல்லாஹ் சபிப்பானாக!”.** *நூல் : இப்னு ஹிப்பான்*

**“எல்லாப் பாவங்களுக்குரிய தண்டனை களையும் அல்லாஹ் மறுமையில் கொடுக்கப் பிற்படுத்திவைப்பான். ஆனால், பெற்றோருக்குத் துன்பம் இழைத்தவனுக் குரிய தண்டனையை அவன் இறப்பதற்கு முன்பே அளித்து விடுவான்”.**

*நூல : ஹாகிம்*

ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, **“யாரசூலுல்லாஹ்! என் தகப்பன் என் பொருட்களைத் தரும்படி கேட்கிறார். நான் என்ன செய்வது?”** எனக்கேட்டார். **“நீயும் உன் பொருட்களும் உன் தகப்பனுக்குத் தான் சொந்தம்”** என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*நூல் : இப்னு மாஜா*

இப்னு அப்பாஸ்(ரழி) அவர்களிடம், **“சிகரத்தையுடையவர்கள் என்று குர்ஆனில் கூறப்பட்டிருப்பது யாரை?” எனக் கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள் பதிலளிக்கும் போது; சுவர்க்கத்திற்கும், நரகத்திற்குமிடையில் அச்சிகரமிருக்கிறது. பெற்றோரின் அனுமதியின்றி புனித யுத்தத்திற்குச் சென்று கொல்லப்பட்டவர்கள் அதில் இருப்பார்கள். அச்சிகரத்தில் பழமரங்களும், பசும் சோலைகளும், நீருற்றுக்களும் இருக்கின்றன. புனித யுத்தத்தில் இறந்தவர்களுக்குச் சுவர்க்கம் கொடுக்க வேண்டும். ஆனால், பெற்றோரின் விருப்பமின்றிப் புனித யுத்தத்தில் கலந்து கொண்டு இறந்தவர்கள் தீர்ப்பளிக்கும் நாள் வரை இதில் தங்கியிருப்பார்கள். அதன் பின் அல்லாஹ்வின் தீர்ப்பின்படி சுவர்க்கத்திற்கோ, நரகத்திற்கோ அனுப்பப்படுவார்கள். இவர்களே சிகரத்தையுடையவர்கள் என அவர்கள் விடையளித்தார்கள்.**

*நூல்கள் : இப்னு மாஜா, இப்னு அபீ ஹாதிம்*

ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து **அல்லாஹ்வின் தூதரே! நான் அதிகமாக யாரை நேசிக்க வேண்டும்? எனக்கேட்டார். “உனது தாயை” என நபியவர்கள் கூறினார்கள். மீண்டும் கேட்டார் மீண்டும் அப்பதிலே கொடுக்கப்பட்டது. அதன் பின்னும் கேட்டார். அதே பதில் அளிக்கப்பட்டது. நான்காம் முறை கேட்கப்பட்டதும் ‘உனது தகப்பனை’** என நபியவர்கள் கூறினார்கள்.

*நூல்கள் : புகாரீ, முஸ்லிம்*

அபூதர்தா(ரழி) அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, **“நான் ஒரு பெண்ணை திருமணம் செய்துள்ளேன். அவளைத் தலாக் கூறிவிடும் படி என் தாய் வற்புறுத்துகிறார். நான் என்ன செய்யவேண்டும்?” எனக் கேட்டார். “தாய் என்பவர் சுவர்க்கத்தின் நடுவாசலாவார்” என நபி(ஸல்) அவர்கள் கூறியதைக் கேட்டுள்ளேன். நீர் விரும்பினால் அவ்வாசலைப் பத்திரப்படுத்து! அல்லது**

**வ ணாா ககா வாடு!** என பதிலளாததாாகள.

*நூல்கள் : திர்மிதி, அபூதாவூத், இப்னு மாஜா, நஸயீ, இப்னு ஹிப்பான்*

**“தாயின் பாதத்தடியில் சுவர்க்கமிருக்கிறது”** என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*நூல்கள் : நஸயீ, இப்னு மாஜா, ஹாகிம்*

எவ்வித சந்தேகமின்றி மூவரின் பிரார்த்தனைகள் அல்லாஹ்வினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

**அநீதி இழைக்கப்பட்டவனின் பிரார்த்தனை.**

**பிரயாணியின் பிரார்த்தனை.**

**பெற்றோர் மக்களுக்குச் செய்யும் பிரார்த்தனை என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.**

*நூல்கள் : அபூதாவூத், திர்மிதீ, தப்ரானீ*

ஒரு மனிதர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, **“அல்லாஹ்வின் தூதரே! ஐந்து நேரமும் ஒழுங்காகத் தொழுது, ரமழானில், நோன்பு நோற்று, ஜக்காத்தையும், நிறைவேற்றி, ஹஜ்ஜும் செய்தேன் எனக்குரிய கூலி என்ன?” என்று கேட்டார். இவ்வாறு ஒழுங்காக நடந்து கொண்டவன் மறுமையில் நபிமார்களுடனும், ஸித்தீகீன்களுடனும், ஷுஹதாக்களுடனும், ஸாலிஹீன்களுடனும் இருப்பான். அவன் பெற்றோருக்குத் துன்பமிழைப்பவனாக இருக்கக்கூடாது. (அப்படித் துன்பமிழைப்பவன் இந்தப் பாக்கியம் பெறமாட்டான்)** என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*நூல்கள் : அஹ்மத், தப்ரானீ, இப்னு குஸைமா, இப்னு ஹிப்பான்*

**ஒரு கணவனும், மனைவியும் குழந்தை எனக்குத்தான் சொந்தம் எனக்கூறிக் கொண்டு நபி(ஸல்) அவர்களிடம் தீர்ப்புக்கு வந்தார்கள். என்னுடைய இரத்தத்தினால் பிறந்த குழந்தை எனக்குத்தான் சொந்தம் எனக்கணவன் கூறினார். அவர் தன் இரத்தத்தை (இந்திரியத்தை) இலேசாகச் சுமந்து, இன்பத்துடன் என் கர்ப்பப்பையில் செலுத்தினார். ஆனால், நான் அக்குழந்தையைப் பத்து மாதம் சுமந்து, பத்தியம் காத்து, பாலூட்டி, துன்பங்கள் சகித்தேன். ஆகவே, குழந்தை எனக்குத்தான் சொந்தம் என்று மனைவி கூறினாள். நபி(ஸல்) அவர்கள் குழந்தை தாய்க்குத்தான் சொந்தம்** எனத் தீர்ப்பளித்தார்கள்.

*நூல்கள் : அபூதாவூத், அஹ்மத்*

**“மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான்; பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும், பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான். எனவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள் அவனைக்கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள். மேலும், (உங்கள்) இரத்தக் கலப்புரைய உறவினர்ளையும் (ஆதரியுங்கள்) நிச்சயமாக அல்லாஹ் உங்கள்மீது கண்காணிப் பவனாகவே இருக்கிறான்”.**

*அல்குர்ஆன் 4:1*

**“(போருக்கு வராது) நீங்கள் பின் வாங்குவீர்களாயின், நீங்கள் பூமியில் குழப்பம் உண்டாக்கி உங்கள் சுற்றத்தாரின் உறவைத் துண்டித்து விடவும் முனைந்து விடுவீர்களோ?”.** *அல்குர்ஆன் 47:22*

**“அவர்கள் எத்தகையோரென்றால், அல்லாஹ்விடம் செய்த வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றுவார்கள். இன்னும், (தாம் செய்த) உடன்படிக்கையை முறித்து விடவும் மாட்டார்கள். மேலும், அவர்கள் எத்தகையோரென்றால் அல்லாஹ் எது சேர்த்து வைக்கப்படவேண்டும் எனக்கட்டளை யிட்டானோ, அதைச் சேர்த்து வைப்பார்கள். இன்னும் அவர்கள் தம் இறைவனுக்கு அஞ்சுவார்கள். மேலும், (மறுமை நாளின்) கடுமையான கேள்வி கணக்கைக் குறித்தும் பயப்படுவார்கள்”.** *அல்குர்ஆன் 13:20,21*

**“அல்லாஹ்விடம் அளித்த வாக்குறுதியை உறுதிப்படுத்திய பின்னர் முறித்து விடுகிறவர்களுக்கும், அல்லாஹ் சேர்த்து விடுகிறவர்களுக்கும், அல்லாஹ் சேர்த்து வைக்க வேண்டுமென ஏவியதைப் பிரித்து விடுகிறவர்களுக்கும், பூமியில் குழப்பம் செய்கிறவர்களுக்கும் சாபந்தான் உண்டாகும். இன்னும், (மறுமையில்) அவர்களுக்கு மிகக்கெட்ட தங்குமிடமும் இருக்கிறது”.**

*அல்குர்ஆன் 13:25*

**“உறவினர்களை வெறுப்பவன் சுவனம் புகமாட்டான்”.** *நூல்கள் : புகாரீ, முஸ்லிம்*

**“எவன் அல்லாஹ்வையும், மறுமை நாளையும் விசுவாசம் கொண்டானோ அவன், தன் உறவினர்களை இணைத்து நடப்பானாக!”.**

*நூல்கள் : புகாரீ, அபூதாவூத், திர்மிதீ*

**“ஒழுங்காக இருக்கும்போது உறவினர்களைப் பேணுவதைவிட உறவினற் வெறுத்தொதுக்கும் போதும், அவர்களை இணைத்து நடப்பதே உண்மையான பேணலாகும் எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்”.**

*நூல் : புகாரீ*

எனவே பெற்ரோரைப் பேணுவோம், பேரருள் பெறுவோம்!

*நன்றி : அல் ஜன்னத், பிப்ரவரி 2005*